# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## (16.4.2008)

திரு.டி.செங்குட்டுவன் :– மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்வரும் வினாவிற்கு விடையளிப்பாரா ?

கிருட்டிணகிரி மாவட்டத்தில் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

முதலமைச்சர் கலைஞர் :– மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருட்டிணகிரி மாவட்டம், ஒசூரில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா அமைய ஒசூர் வட்டம், விசுவநாதபுரம் கிராமத்தில் 172.19 ஏக்கர் நிலம், எல்காட் நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. இதற்கென எல்காட் நிறுவனத்தால் மத்திய அரசிடம் உரிய விண்ணப்பம் செய்யப்பட்டு, மத்திய அரசின் முறையான ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இங்கு தகவல் தொழில் நுட்பப் பூங்கா அமைக்க எல்காட் நிறுவனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு.டி.செங்குட்டுவன் :– மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி 2006–2007ஆம் ஆண்டிற்கான நிதிநிலை விவாதத்தின் போது கொடுக்கப்பட்ட கேள்வியாகும். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 26–2–2008 அன்று தர்மபுரியில் நடைபெற்ற ஒகனேக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிவிட்டு, அன்று மாலையில் கிருஷ்ணகிரியில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவரின் புதிய அலுவலகத் திறப்பு விழாவிலே ஒசூர் விசுவநாதபுரத்திலே சுமார் 200 ஏக்கர் நிலத்திலே தகவல் தொழில் நுட்பப் பூங்கா அமைப்பதற்கான திட்டத்திற்கு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய திருக் கரங்களால் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். அதற்காக முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியாருக்கும் எங்கள் மாவட்ட மக்கள் சார்பாகவும் என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதே வேளையில், முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எப்போது

எல்லாம் முதல்வராகப் பொறுப்பேற்கிறாரோ அப்போதெல்லாம் தமிழகத்தில் தொழில் வளம் பெருகுகின்ற நிலை உள்ளது. எங்கள் மாவட்டத்தில் மட்டும் சொல்ல வேண்டுமேயானால் 1972ஆம் ஆண்டு கலைஞர் முதல்வராக இருந்த போது தான் ஒசூரில் முதல் சிப்காட்டை அமைத்துத் தந்தார்கள்.

பேரவைத் தலைவர் :— செங்குட்டுவன், கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

செங்குட்டுவன் :— கிருஷ்ணகிரியில், தேசிய நெடுஞ்சாலை செல்கின்ற அந்தப் பகுதியில் சுமார் 200 ஏக்கர் நிலம் இன்றைக்கு அரசிடம் உள்ள காரணத்தினால் மேற்படி அரசு நிலத்திலே அரசின் சார்பில் மேலும் ஒரு தகவல் தொழில்நுட்ப தொழிற்பூங்கா அமைக்கின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முதலமைச்சர் கலைஞர் :— மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கின்ற அந்தக் கேள்விக்கு நான் அளித்த பதிலில் ஒரு தொழில்நுட்பப் பூங்கா அமைவதைப் பற்றித் தான் கூறியிருக்கிறேன். அவர் இன்னொரு பூங்காவிற்கு ஆசைப்படுகிறார். அது பற்றி பிறகு பரிசீலிக்கப்படும்.

செங்குட்டுவன் :— முதல்வர் கலைஞர் அவர்களுடைய பதிலுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரங்கநாதன் :— மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2007–2008ஆம் நிதி ஆண்டில் மென்பொருள் ஏற்றுமதி மற்றும் வர்த்தகம் மூலமாக எவ்வளவு ரூபாய் மாநில அரசுக்கு வருமானம் வந்தது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முதலமைச்சர் கலைஞர் :— மென்பொருள் ஏற்றுமதியைப் பொறுத்தவரையில் ஆண்டுவாரியாகச் சொல்லப் போனால் அண்மையில் சில ஆண்டுகள் என்ற கணக்கில்

2005–2006ஆம் ஆண்டில் – 14,400 கோடி ரூபாய் அளவுக்கும்

2006–2007ஆம் ஆண்டில் – 21,700 கோடி ரூபாய் அளவுக்கும்

இப்போது 2007–2008ஆம் ஆண்டில் இது 26,000 கோடி ரூபாயாக ஏற்றுமதி உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நன்மாறன் :– மதுரையில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா கேட்ட போது முதலமைச்சர் அவர்கள் மதுரைக்கு மாத்திரமல்லாமல் பல்வேறு மாவட்டங்களுக்கும் அறிவித்தார்கள். அங்கெல்லாம் பூங்காக்கள் மணம் பரப்பத் தொடங்கி விட்டன. மதுரையில் விரைவில் அடிக்கல் நாட்டப்படும் என்று சென்ற முறை அறிவித்திருந்தார்கள். அது எப்போது நடைபெறும் ?

முதலமைச்சர் கலைஞர் :– தலைவர் அவர்களே, கோவை, திருச்சி, மதுரை, சேலம், நெல்லை ஆகிய நகரங்களில் தகவல் தொழில் நுட்பவியல் பூங்காக்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எல்காட் நிறுவனத்தின் மூலமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதிலே கோவை, சேலம், நெல்லை பூங்காக்களுக்கான அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றுள்ளது. திருச்சி, மதுரை ஆகிய நகரங்களிலும் தகவல் தொழில் நுட்பப் பூங்காக்கள் அமைய விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மதுரையைப் பொறுத்த வரையில் சில வாரங்களில் அங்கே இந்த தொழில் நுட்பப் பூங்கா தொடங்குவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெறும்.

அப்பாவு :– பேரவைத் தலைவர்களே, தென் மாவட்ட மக்களின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2000ஆம் ஆண்டில் நாங்குநேரியில் உயர்தொழில் நுட்ப பூங்கா – சிறப்பு பொருளாதார மையத்தை ஏற்படுத்தினார்கள். ஐந்தாண்டு காலமாக அந்தத் திட்டம் தொய்விலே இருந்து தற்போது கடந்த வாரம் கலைஞர் அவர்கள் தென் மாவட்ட மக்களுடைய வாழ்வில் ஒளியேற்றும் வண்ணம், புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தியதற்காக தென் மாவட்ட மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ராதாபுரத்தில் இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமாக 4000 ஏக்கர் நிலம் உள்ளது. இந்தியாவிலேயே தமிழகத்தை தொழில் துறையிலே முதல் இடத்திற்குக் கொண்டு வந்துள்ள கலைஞர் அவர்கள் அங்கேயும் மிகப் பெரிய தொழில் தொடங்க முன்வருவார்களா ?

முதலமைச்சர் கலைஞர் :– தென் மாவட்டங்களில் வளத்தை உருவாக்குவதற்கும், செழிப்பை உருவாக்குவதற்கும் என்னென்ன ஏதுவான வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை ஆய்ந்து அறிவிக்கும்படி ஏற்கனவே இந்த அரசின் சார்பாக ஓய்வு பெற்ற உச்ச நீதி மன்ற நீதிபதி திரு. ரெத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவிலே சென்றவர்கள் அவைகளையெல்லாம் ஆய்வு செய்து சில பல திட்டங்களை அரசுக்கு அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டங்களில் ஒன்று நாங்குனேரி. அந்தத் திட்டம் தொடங்கப்பட்டு இடையிலே நின்று இப்போது மீண்டும் தொடங்கப்படுவதற்கான அறிகுறிகள் தோன்றி, அதற்கான ஆரம்பம் கடந்த வாரத்திலே ஒரு ஒப்பந்தம் மூலமாக நடைபெற்றிருக்கின்றது. எனவே நாங்குநேரியைத் தொடர்ந்து தென் மாவட்டங்களிலே பல செழிப்பான திட்டங்களை உருவாக்க இந்த அரசு முன் வரும் என்பதை உறுதிப்பட தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி காயத்ரி தேவி :– சென்னை மற்றும் முக்கிய நகரங்களின் அருகில் தகவல் தொழில் நுட்பப் பூங்காக்கள் அதிகரித்து வருவதால் மக்களின் பழக்க வழக்கங்கள் மாறிக் கொண்டே வருகிறது. வீட்டு வாடகை உயர்ந்துள்ளது. ஏழைகள் இப்படிப்பட்ட நகரங்களில் எப்படி வாழ்வது என்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். ஆகையால் இந்தத் தொழில் நுட்பப் பூங்காக்களை இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளின் அருகில் அமைத்து அதற்கான அடிப்படை வசதிகளை செய்து தர இந்த அரசு முன்வருமா ?

முதலமைச்சர் கலைஞர் :– இது தொழில் வளர்ச்சிக்கு உரிய கேள்வி அல்ல. பரிசீலனைக்கு உரிய கேள்வி.

சிவபுண்ணியம் :– கோவை, திருச்சி, மதுரை, சேலம், நெல்லை ஆகிய மாவட்டங்களிலே தொழில்நுட்பப் பூங்கா தொடங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, அதற்குரிய பணிகளும் தொடங்கிக் கொண்டிருக்கின்ற வேளையில், இதே போல நமது ஒன்றுபட்ட தஞ்சை

மாவட்டத்தில் இப்படிப்பட்ட தொழில்நுட்பப் பூங்காக்கள் தொடங்கப்பட வேண்டுமென்று நான் பலமுறை கேள்வி எழுப்பியிருக்கின்றேன். அது டெல்டா பகுதி என்ற காரணத்தினாலும், முற்றிலும் விவசாயத்தையே சார்ந்திருக்கிற பகுதி என்பதைக் காரணம் காட்டியும், எந்தத் தொழில்களும் வரவே முடியாத நிலை இருக்கிறது. ஆனால், ஆயிரக்கணக்கான படித்த இளைஞர்கள் வெளி மாவட்டங்களுக்கும் வெளி மாநிலங்களுக்கும் வேலைக்காகச் செல்ல வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். பொறியியல் கல்லூரிகள், தொழிற்கல்லூரிகள் ஏராளமாக அந்த மாவட்டத்தில் இருக்கிறது. சாலை வசதி, விமான போக்குவரத்து வசதிக்கான வாய்ப்புகளெல்லாம் இருக்கின்ற காரணத்தினாலே, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கின்ற முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா ?

முதலமைச்சர் கலைஞர் :— நான் சொன்ன இந்த வரிசை நிறைவு பெற்றதும் அடுத்து தஞ்சைதான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ.கே.போஸ்:— மதுரையில் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அது இலந்தைக்குளம் என்கின்ற பகுதியிலேயா அல்லது காமராஜர் பல்கலைக்கழகத்தின் அருகிலேயா அமைய உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

முதலமைச்சர் கலைஞர் :— இலந்தைக்குளம் பகுதியில்தான் அமைக்க ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எந்தப் பகுதியில் என்று குறிப்பிட்டு அழைப்பு அனுப்பப்படும். தவறாமல் அவர் வருகை தர வேண்டுகிறேன். (மேஜையைத் தட்டும் ஒலி)

* * *